புதிய அவையம்

Vol. 09, Issue – 02, December - 2025

கட்டுரை பெறப்பட்டது : November - 2025 கட்டுரை ஏற்கப்பட்டது : December – 2025

# கவிஞர் சூ.செல்லப்பாவின் கூவு கோழியே விளம்பும் சமூக நீதி

**மா. முனிராஜ்,**

முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),

பதிவெண்: 2024PHDTTM03,

**முனைவர். பூ.சு. கணேஷ்மூர்த்தி,**

உதவிப் பேராசிரியர்,

தமிழ்மொழி மற்றும் மொழிப் பெயர்ப்பியல் துறை,

திராவிடப் பல்கலைக்கழகம்,

சீனிவாசவனம், குப்பம் - 517426

**ஆய்வுச்சுருக்கம்:**

கவிஞர் சூ.செல்லப்பாவின் கூவு கோழியே என்ற புதுக்கவிதைப் படைப்பில் கடவுளியல், பொருளியல், குலவியல் என்ற மூன்று தலைப்புகளில் கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. அக்கவிதைகளின் ஊடாக விளக்கப்பட்டுள்ள சமூகப் பாகுபாடுகள், பாகுபாட்டுக்கு எதிரான கருத்தியல், சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வு நிலைக்கான காரணிகள், மனுநீதி கருத்தியலால் சமூகத்தில் விளைந்துள்ள பாதிப்புகள், பார்ப்பனியத் தத்துவத்தின் பரிமாணங்கள், இரட்டைப் போக்குகள் போன்றவற்றை அடையாளம் கண்டு அவற்றின் உள்ளடக்கத்தை சமூக நீதிக் கொள்கை நோக்கில் ஆய்வு செய்வதை இக்கட்டுரை விளக்குகிறது.

**திறவுச் சொற்கள்:** சமூக நீதி, கவிஞர், சூ.செல்லப்பா, கூவு கோழியே, மனிதநேயம், தலித், சமூகம், மனித உரிமைகள், பார்ப்பனியம், வேறுபாடு, பாகுபாடு

**ஆய்வுநோக்கம்:** சூ.செல்லப்பாவின் கூவு கோழியே என்ற கவிதைத் தொகுப்பினை சமூக நீதி நோக்கில் ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை:**

கவிஞர் சூ.செல்லப்பா, இ.ஆ.ப. இயற்கை, மொழி வரலாறு, தன் வரலாறு, தொண்மைச் சமூக வாழ்வியல் வரலாறு, தலித்தியம், சமயம், மொழிபெயர்ப்பு, உளவியல், பொருளாதாரம், ஆராய்ச்சி என பல துறைகளிலும் இயங்கி வரும் பல்துறை அறிஞர் ஆவார். இவரது படைப்புகளில் கூவு கோழியே, வௌவாலின் பயணம், தேன்கிண்ணம், ஓடைக் கவிதைகள் போன்ற பல நூல்களிலும் சமூகநீதிக் கருத்துக்களை உள்ளடக்கமாகக் கொண்ட கவிதைகள் நிறைவாக உள்ளன. இவற்றில் கூவு கோழியே என்ற புதுக்கவிதைப் படைப்பில் உள்ள கவிதைகளைச் சமூக நீதிக் கொள்கைப் பின்புலத்தில் இருந்து ஆராயும் வகையில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**சமூக நீதி ஒரு பார்வை:**

சமூகத்தில் நிலவும் பல்வேறு பிரிவுகளுக்கு இடையே வேறுபாடுகள் இருப்பது இயற்கையானது. ஆனால் அந்தப் பிரிவுகளில் சில வலுவுடையதாகவும், பல நலிவுற்றதாகவும் இருப்பது என்பது செயற்கையானது. சமூகத்தில் வாழும் அனைவரும் சமமாக மதிக்கப்படுவதும், அனைவருக்கும் சமமான நியாயமான வாய்ப்பு வழங்கப்படுவதும், சமூகத்தில் உள்ள செல்வம் அனைவரிடமும் சமமாக இருப்பதும் சமூக நீதி உள்ள சமூகத்தின் அடையாளங்கள். சமூகத்தில் வாழும் மனிதர்கள் அனைவரும் பாலின, சாதி, மத ரீதியாக எந்தவிதமான பாகுபாடும் இன்றி நடத்தப்பட வேண்டும். ஆனால் இதுவரை உலகத்தில் சமூகங்களின் வரலாறுகள் பெரும்பான்மையான காலகட்டங்களில் பாகுபாட்டோடு மட்டுமே இருந்து வந்துள்ளன. இந்தப் பாகுபாடு இனியும் தொடராத வண்ணம் அரசின் சட்டங்கள் மூலம் தடுப்பதும், இவ்வளவு காலமாகப் பாகுபாட்டால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேர்ந்த இழப்புக்கு ஈடு செய்வதும் சமூக நீதிக் கோட்பாட்டின் மிக முக்கியமான குறிக்கோள்கள் ஆகும்.

"Social justice is justice in relation to the distribution of wealth, opportunities, and privileges within a society where individuals' rights are recognized and protected." என்று ஆக்ஸ்போர்டு அகராதி சமூக நீதியை வரையறுக்கிறது. Social Justice (சமூக நீதி) என்ற சொல் முதன்முதலில் இத்தாலியப் பாதிரியாரான லூய்கி டபரெல்லி என்பவரால் 1840களில் அவரது "இயற்கைச் சட்டம்" பற்றிய தத்துவக் கட்டுரையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**வேறுபாடும் பாகுபாடும்:**

வேறுபாடு அல்லது வேற்றுமை என்பது இயற்கையில் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருப்பது. ஆண் - பெண், பள்ளம் - மேடு, நீர் - நெருப்பு, செடி - மரம் என்றவாறு பலவகையாக வேற்றுமைகள்

உண்டு. இவையனைத்தும் இயற்கையானவை, இயல்பானவை. பாகுபாடு என்பது செயற்கையில் ஒன்றை உருவாக்கி, தான் வாழ பிறரைச் சுரண்டுவது. மேல் கீழான எண்ணத்துடன் பிறரை மதிப்பது, நடத்துவது, பின்பற்றுவது. வெள்ளை - கருப்பு என்பது வேற்றுமை. வெள்ளை அழகு, கருப்பு அசிங்கம் என்பது பாகுபாடு. உயரம் - குட்டை என்பது வேற்றுமை. உயரமாக என்பது பெருமை, குட்டையாக இருப்பது சிறுமை என்பது பாகுபாடு. கிராமம் - நகரம் என்பது வேற்றுமை. கிராமத்தவரை நாகரிகம் குறைவானவராகவும், நகரத்தாரை மேட்டிமையான நாகரிகம் கொண்டவராகவும் கருதுவது பாகுபாடு. பேச்சு வழக்கில் ஆம்பள - பொட்டச்சி; மேல்சாதி - கீழ்சாதி; பலசாலி - நோஞ்சான் போன்றவை பாகுபாட்டுக்குரிய சொற்கள் ஆகும். இவை போலவே மாற்றுத்திறனாளிகளை நொண்டி, குருடு, செவிடு, ஊமை என்பதும், மாற்றுப்பாலினத்தவரை ஒன்பது, அலி, அது என்பவையும் பாகுபாட்டுச் சொற்கள் ஆகும்.

**பாகுபாட்டுக்கு எதிரான கருத்தியலே சமூக நீதி:**

இந்தப் பாகுபாட்டுக்கு எதிராக கருத்தியல் ரீதியாகத் தொடர்ந்து பல அறிஞர்களும், படைப்பாளிகளும் இயங்கியதன் விளைவாகவே நாட்டின் சட்டங்களும், சமூகத்தின் திட்டங்களும் மனித மாண்புடன் வகுக்கப்படலாயின. அவ்வகையில் *"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"* என்று முழங்கிய வள்ளுவன் முதலாக, *"ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்"* என்ற திருமூலர், *"பறைச்சி ஆவதேதடா, பணத்தி ஆவதேதடா; இறைச்சி தோல் எலும்பினுள் இலக்கமிட்டிருக்குதோ?"* என்ற சிவவாக்கியர், *"மிக்கு உயர்ந்த சாதி, கீழ்ச்சாதி என்னும்; வேற்றுமைகள் தமிழ்க்கில்லை; தமிழர்க்கில்லை; பொய்க் கூற்றே சாதி எனல்"* என்ற பாரதிதாசன் இவ்வாறு பாகுபாட்டுக்கு எதிரான நீண்ட நெடிய கருத்தியல் போராட்டமே சமூக நீதியை வளர்த்தெடுத்துள்ளது.

**கடவுளும் சமூக நீதியும்:**

இந்த உலகம் இந்த வடிவில் இருப்பதற்கான அடிப்படைக் காரணம் உழைப்புதான். உழைப்பைக் கழித்தால் உலகில் கலைப்படைப்பு என்று ஒன்று கூட இல்லை. ஆனால் உழைப்பை மட்டும் உறிஞ்சிக் கொண்டு, உழைப்பவனைக் கழித்து விடும் வஞ்சனை எவ்வளவு பெரிய ஓரவஞ்சனை எனக் கண்டிக்கிறது பின்வரும் கவிதை.

*உயர்ந்தவன் நீ என்று எண்ணி*
*ஓ கடவுளே! உனக்காக எழுப்பினோம்*
*உயர்ந்த கோபுரங்கள்.*
*ஆனால் நீயோ...*
*கருவறைக்குள்ளே காலடி வைத்ததும்*
*கலைக் கோபுரம் கட்டிய கைகளைத்*

*தீண்டத் தகாததாய் ஆக்கினாய்!*

*திட்டிப்படைத்தாய் பெரும் சுருதி!*

*உன்னுடைய ஓர வஞ்சகம்*

*ஓடும் நாள் வந்ததெனக்*

*கூவு கோழியே!*

பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை; எல்லோரும் சமம் இல்லை என்பதைக் கோவிலுக்கு வரும் போது உணர வேண்டும் என்பதற்காகத்தானோ என்னவோ பணம் உள்ளவருக்கு சிறப்பு தரிசனமும், பணம் இல்லாதவருக்கு காத்திருப்பு தரிசனமும் கோவில்களில் எழுதப்படாத விதியாக உள்ளது. இருப்பவன் இல்லாதவன் என்று மனிதன் பார்ப்பது வேறு. ஆனால் கடவுளும் பார்ப்பது என்பது எப்படி நியாயம் என்ற ஏக்கத்தோடு *“இல்லாத என்னை விட்டு செல்வம் இருப்பவர்களோடு கூடியது குற்றம் எனக் கூவு கோழியே!”* என்கிறார். ஒடுக்கப்பட்ட மக்களின் கோவில் நுழைவு மறுக்கப்படுவது தற்காலத்திலும் தொடர்ந்து வருகிற ஒரு சமூக வன்கொடுமை. பிரித்தானிய இந்தியாவில் திருவாங்கூர் சமஸ்தானத்தில் வைக்கம் என்ற ஊரில் சிவன் கோவிலைச் சுற்றி இருந்த தெருக்களை அவர்ண சாதியினர் பயன்படுத்தக் கூடாது என்று இருந்தத் தடையை நீக்குவதற்காக தந்தை பெரியார் தலைமையில் நடைபெற்ற போராட்டம் வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க போராட்டம். அதனாலேயே பெரியார் ‘வைக்கம் வீரர்’ எனப் போற்றப்படுகிறார். கடவுளின் மீது உள்ள பக்தியின் காரணமாகத் தடையை மீறி கோவிலுக்குள் நுழையும் போது கடுமையான தண்டனைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாமல் உயிர்க்கொலையும் நேர்ந்துள்ளதைப் பின்வரும் கவிதை பேசுகிறது.

*“உன் வீடே என் வீடென நினைந்து*

*உனைத் தேடி ஓடோடி வந்தேன்*

*ஆனால் என் அப்பனே!*

*உன் திருவாசல் படியை*

*என் கால்கள் தொட்டதும்*

*மேளமானது என் முதுகு*

*மிளகாய்த் தூள் தின்றன என் கண்கள்*

*முடிவற்ற வாழ்வைத் தேடிய எனக்கு*

*முடிவே வந்தது!“*

என்ற கவிதை வழியாக ஆந்திரப் பிரதேச மாநிலம் விஜய நகரத்தில் 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற கோவில் நுழைவுப் போராட்டத்தில் ஈடுபட்ட தலித் மக்களின் கண்களில் மிளகாய்த் தூள் தூவி தண்டனைக் கொடுத்துள்ளனர் என்ற செய்தியை அறிய முடிகிறது.

**மனுநீதியும் சமூக நீதியும்:**

புராணங்கள் என்ற புனை கதைகளையே வரலாறாகச் சித்தரிக்கும் முயற்சி இன்றைய அரசின் ஆட்சியாளர்களால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதை நாம் நாளிதழ் செய்திகளில் காண்கிறோம். உண்மையான வரலாற்றை அறிந்து செயல்பட புராணங்கள் எவ்வளவு பெரிய தடைக்கல்லாக விளங்குகின்றன என்பதை இக்கவிதையின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

*"உண்மை என உணர்த்த*
*ஓராயிரம் கதைகளைக் கட்டிவிட்டீர்*
*உங்கள் கதைக் காட்டிற்குள்*
*ஓராயிரம் தடவை நடந்தாலும்*
*உண்மை ஒளி தெரிவதில்லை.*
*கட்டிய கதை எது?*
*காட்ட நினைத்த உண்மை எது?*
*உண்மையை உண்மையாய் உணர்ந்திட*
*உங்கள் புராணம் எல்லாம்*
*ஒரு கோடித் தடை என்று*
*கூவு கோழியே"*

இந்தப் புராண, இதிகாசப் புரட்டுகளுக்கெல்லாம் அச்சாணியாய்த் திகழும் மனுதர்மக் கோட்பாட்டின் அடிப்படையான வர்ணப்படிநிலையை முற்றிலுமாக நிராகரிக்கும் கவிஞர், இப்படி உரைக்கிறார்.

*"... இறைவா உன் காலில் இருந்து*
*எங்களை நீ ஈன்றதாக*
*கதை ஒன்று கட்டி விட்டாயே*
*அக்கருத்தை நீ மறந்தாயோ?*
*அக்கருமக் கயிறு உந்தன்*
*கழுத்தை நெரிக்கும் எனக்*
*கூவு கோழியே"*
*"... எங்கள் துயர் உங்கள் செவி*

*எட்டாது செய்வதுமே*

*ஏணிப்படிக் கொள்கை தானே?"*

1927ஆம் ஆண்டு டிசம்பர் 25 அன்று மகாராட்டிர மாநிலம் கொங்கனில் உள்ள மகத் கிராமத்தில் அம்பேத்கர் தலைமையில் நடைபெற்ற தலித் மக்களின் போராட்டத்தில் மனுஸ்மிருதி எரிக்கப்பட்டது என்பது வரலாறு. அத்தகைய போராட்டங்கள் தொடங்கி நூற்றாண்டுகள் கடந்த பின்னும் இன்றும் இந்த அநீதித் தத்துவத்தின் கொடுமைகள் ஒழிந்தபாடில்லை. தலையிலிருந்தும், மார்பிலிருந்தும், வயிற்றிலிருந்தும், காலிலிருந்தும் பிறந்ததாக நடைமுறைச் சாத்தியமற்ற கட்டுக் கதைகளை புனிதத் தன்மையுடன் மக்களை நம்ப வைத்து சமத்துவத்துக்கு ஊறு செய்ததே இந்த மனுதான். அதன் காரணமாகவே சமூகநீதி என்ற சமத்துவக் கோட்பாடு மனுநீதிக்கு எதிரானதாக நிலைநிறுத்தப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 14-இன்படி அனைவரும் சமம் என்பது உறுதி செய்யப்பட்ட போதும் அரசியலமைப்புச் சட்டம் மட்டுமே சமூகத்தின் இயங்கு திசையைத் தீர்மானிப்பது இல்லை. அச்சட்டத்தை எப்போதும் சமூகத்தின் நம்பிக்கைகள் மற்றும் கலாச்சாரம் சார்ந்த மனுச் சட்டமே மேலாதிக்கம் செலுத்துகிறது. அந்தக் குமுக ஆதிக்கச் சட்டத்தினால் தான் மக்களின் ஒரு பகுதியினர் சமூகத்தாலும் பொருளாதாரத்தாலும் இன்றும் ஒடுக்கப்பட்டு கொண்டே இருக்கின்றனர். இந்தியத் திருநாடு விடுதலை அடைந்து பொன் விழா கொண்டாடி முடிந்த போதும் அதன் சுதந்திரக் காற்றை இன்று வரை அனைவரும் சமமாகச் சுவாசிக்க விடாமல் செய்து கொண்டிருப்பது  இச்சட்டத்தின் தாக்கமே என்பதை தமது கவிதைகள் மூலம் கவிஞர் சூ.செல்லப்பா விளக்கிக் காட்டுகிறார்.

**பொருளாதாரத்தில் சமூக நீதி:**

கடவுளும், பொருளாதாரமும் குலத்தின் ஆதிக்கத்திற்கு ஆதரவாக ஒன்றுக்கொன்று எப்போதும் ஒத்திசைவுடன் இயங்குகின்றன. பின்வரும் வரிகள் இதனை நன்கு உணர்த்துகின்றன.

*"செல்வத்தைக் கடவுளாகச்*

*சிறப்பிக்கும் பாரதமே*

*உன் செல்வத்தைக் கடவுள்களும்*

*கடவுள்களைச் செல்வங்களும்*

*காலங்கள் தோறும்*

*காத்து நிற்கின்றன"*

ஈராயிரம் ஆண்டுகளாய் இருக்கும் கிறித்துவத்தை நோக்கி, அது தலித் மக்களைக் கையாளும் தன்மை பற்றியும், திருவிவிலியத்தின் நோக்கு பற்றியும் பின்வரும் கேள்விகள் கவிஞரால் முன்வைக்கப்படுகின்றன.

*"கங்கைக் கரை வேதங்கள்*
*எங்கள் கால்களை முறித்தன வென்றால்*
*நீயோ எங்கள் கைகளை முறித்தாய்*
*எங்களைக் காட்டிக் காட்டி*
*எவ்வளவு செல்வம் திரட்டினாய் நீ*
*அதில் எங்கள் பங்கு எங்கே?"*
*"உன் திருநூலில் உள்ள (திருவிவிலிய நூல்)*
*அரைப்புள்ளி கால்புள்ளி கூட*
*அழியாது காலத்தால் என்கின்றார்.*
*ஏன் தெரியுமா - இந்த இருப்புச் சட்டம்?*
*இருப்போரின் செல்வத்தை*
*என்றென்றும் நீ காத்து நிற்க*
*அவர் செய்த சூழ்ச்சி யன்றோ?"*

**பார்ப்பனியமும் முதலாளித்துவமும்:**

கார்ல் மார்க்ஸ் முதலாளிகளை *"உற்பத்தி செய்யாத, சுரண்டல் ஒட்டுண்ணிகள்"* என்று வரையறுக்கிறார், அவர்கள் சமூகத்திற்கு எதையும் பங்களிக்க மாட்டார்கள், உற்பத்தியில் பெரும் பங்கை அநியாயமாக எடுத்துக்கொள்கிறார்கள் என்கிறார். *"பார்ப்பன இந்து மதமோ அதன் இயல்பிலேயே பிறப்பின் அடிப்படையில் உழைக்கின்ற மக்களை சாதிய அடுக்குமுறையாலும், அடக்குமுறையாலும், ஆதிக்கம் செலுத்துவது என்று முதலாளித்துவ ஆளும் வர்க்கத்திற்கு இயற்கைக் கூட்டாளியாக அமைகிறது."* என்று அம்பேத்கர் கூறுகிறார். இதிலிருந்து பார்ப்பனியம் என்பது அடிப்படையில் இந்தியாவின் முதலாளித்துவ வடிவம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. பார்ப்பனர்களைக் கவிஞர், *"காலத்திற்கு ஏற்பக் கடவுளையே மாற்றிக் கொள்ளும் கங்கைக் கரைக் கூட்டம்"* எனவும், *"உங்கள் சத்துவக் கொள்கை எல்லாம் சாப்பாட்டுக் கொள்கை"* எனவும், *"தொல்வினையும் உண்டியலும் நீங்கள் தொடுத்த கதையே"* எனவும் மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறார். கவிஞர். சூ.செல்லப்பா பார்ப்பனர்கள் குறித்து உரைப்பதும், கார்ல் மார்க்ஸ் முதலாளிகள் குறித்து உரைப்பதும், பார்ப்பனர்கள் தொடர்பான அம்பேத்கரின் கருத்தும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

*"கருமமாம் கருமம்*
*செல்வத்தில் குளிக்கிறவன் செய்தானாம்*
*நற்கருமம் முற்பிறப்பில்*
*சேற்றிலே உழன்று*
*செந்நெல்மணி குவித்தோன்*
*செய்தானாம் பாவம் பல கொடி*
*இதுவே தான் அறமென்று*
*எத்தனையோ கோவில் கட்டி*
*செதுக்கி வைத்தார் சிற்பங்கள் பாரதத்தில்*
*இக்கருமம் அறுகவெனக்*
*கூவு கோழியே"*

ஒருவரிடம் உள்ள செல்வம் என்பது அவரவர் முற்பிறவியில் செய்த நன்மை தீமைகளைப் பொருத்தது என்று கோவில்களில் செதுக்கி வைத்திருப்பதே சுரண்டலின் ஒரு வடிவம்தான் என்பதை விளக்குகிறார் கவிஞர்.

இந்திய ஊடகத் தலைமை குறித்த 2023 அறிக்கை, இந்தப் பதவிகளில் 90% உயர் சாதிக் குழுக்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்பதைக் கண்டறிந்துள்ளது. மத்திய பல்கலைக்கழகங்களில், சுமார் 90% பேராசிரியர்கள் பொதுப் பிரிவைச் சேர்ந்தவர்கள், அதே நேரத்தில் சுமார் 5.4% மட்டுமே தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் 1.38% மட்டுமே பழங்குடியினர்களாக உள்ளனர் என்பதை பல்கலைக்கழக மானிய அறிக்கை 2022-23 தெரிவிக்கிறது.

*"உயர்கிளையில் உட்கார்ந்தோரின்*
*உரிமைகளைப் பேசுவதே நாட்டுப்பற்று.*
*அவர் உடைமைகளைப் பேணுவதே*
*ஆட்சியறம் என்றெல்லாம் இயம்புவது*
*ஏமாற்று வேலையெனக்*
*கூவு கோழியே!"*

ருஷ்யப் புரட்சியாளர் லெனின் சொல்கிறார், "அரசு என்பது அடிப்படையில் ஆளும் வர்க்கத்தினரின் உடைமைகளைக் காத்திடும் ஒரு அமைப்பு. அது ராணுவம், காவல், துப்பாக்கி, பீரங்கி போன்றவாறே கடவுளையும் ஒரு பாதுகாப்புக் கருவியாகக் கைக் கொண்டிருக்கிறது"

**பாகுபாட்டை வளர்த்திடும் இரட்டைப் போக்குகள்:**

"ஆரியர் வரவிற்குமுன் தென்னகத்தில் இசையும். இயலும், நாடகமும் பறையர், பாணர் போன்ற குடிகளால் புரக்கப்பட்டன. பின்னர் இவையெல்லாம் அக்கிரகாரத்தாரால் வலுவாக எடுத்துக் கொள்ளப்பட்டன. இவர்கள் மற்றவர்களை உயரே விடுவதேயில்லை" என்ற பின்குறிப்புடன் வரும் பின்வரும் கவிதை பார்ப்பனர்களின் கருத்துத் திருட்டை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

*"பாடலுக்குப் பண் அமைத்தோம்;*
*பல்லிசைகளும் நாங்கள் படைத்தோம்!*
*தோல் கருவி துளைக் கருவி*
*தொட்டுவிட்டோம் தூய இசைவெள்ளம்!*
*அன்றோ அவை எல்லாம்*
*அண்டத் தகாக் கலைகள் என்றீர்.*
*எங்களிடம் இருந்து நீங்கள்*
*இன்றிவற்றைப் பறித்த பின்னர்*
*இவை தெய்வக் கலைகள் என்றீர்*
*இவ்விரட்டைப் போக்கு அகலக்*
*கூவு கோழியே!"*

ஒரு செயல் நன்மையானதோ அல்லது தீமையானதோ எதுவாக இருந்தாலும், அச்செயலைச் செய்கின்ற குலத்தினரைப் பொருத்தே அதன் நன்மை தீமையின் அளவு எடை போடப்படுகிறது. குற்றமிழைத்தவர் சூத்திரனாக இருந்தால் உயிரை வாங்குவதும், பார்ப்பானாக இருந்தால், அவனுக்கு மொட்டையடித்து ஊரைவிட்டுத் துரத்துதலும் தண்டனையாகக் காண்பிக்கும் மனுவாதக் கோட்பாட்டின் நீட்சியாகவே நடைமுறையும் இருப்பதை விளக்குகிறது பின்வரும் கவிதை.

*"உங்கள் ஆட்சியிலே*
*ஊழல் இருவர் செய்தால்*
*சரஊழல் சிகப்பனையோ*
*சாடி ஒரு சொல்லால் மறந்திடுவீர்!*
*கடுகளவு தவறு செய்த*
*கருப்பனுக்கோ காட்டிடுவீர் பதவி நீக்கம்!*
*இந்தச் சழக்கொழிந்து*
*சட்டத்தின் முன்னாலே*
*சமம் இங்கு எல்லோரும்*
*என்றே இக் காலையிலே*

*கூவு கோழியே!"*

சமூகத்தில் பெருஞ்சாதனை புரியும் ஒருவருக்குத் தரும் மதிப்பென்பது, அவர் சார்ந்த குலத்தைப் பொறுத்தே அமைகிறது. படிப்பதற்காக இருந்த பல தடைகளைத் தாண்டி பாரிஸ்டர் பட்டம் பெற்று வந்தபோதும், இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றிட இரவு பகல் பாராமல் உழைத்தபோதும், தாழ்த்தப்பட்ட மகர் குலத்தில் பிறந்தவர் என்ற ஒரே காரணத்திற்காக அறிவர் அம்பேத்கரை, ஒரு சாதிக் கட்சித் தலைவரைப் போல அணுகுவதுதான் இச்சமூகத்தில் உள்ள பொதுப்புத்தியின் நிலை. பொதுவாக நன்மை தீமைகளைச் சட்டத்தின் பார்வையில் மனித நேய உணர்வுடன் அணுகுவதே சரியானது. ஆனால் சிலர் அவரவர்களுக்கு ஒரு சட்டம் நீதி என்று வைத்துக் கொண்டு எங்களைப் பொறுத்தளவில் இதுதான் சரி என வாதிடுவர். அத்தகைய சுய நலக்காரர்களை, தேவைக்கு ஏற்பக் கிளைக்குக் கிளைத் தாவும் குரங்குகளாகச் சித்தரித்துள்ளார்.

*"எங்களைப் பொறுத்த மட்டில்*
*இதுவேதான் நெறி என்கும்*
*மேல்கிளை தாவும் மேதாவிகளே!*
*உங்களைப் பொறுத்த மட்டில்*
*கொம்பிற்கு ஒருநீதி கூறுவதேன்?*
*கிளைகளுக்கு ஒன்று என*
*வளைத்துக் கூறுவது வாய்மையாமோ?*
*குலத்திற்கு ஒரு நீதி*
*கூறுவது பாவமெனக்*
*கூவு கோழியே!"*

சமூகத்தின் உயர்சாதி அடுக்கில் இருப்பவர், தன்னை எளிமையாகக் காட்டிக் கொள்ள வேண்டும் என்பதற்காக எளியோரைப் போல காட்சி தருவர். காந்திண்ணல் இடுப்பிலே வேட்டியை மட்டும் கட்டிக்கொண்டு எளிமையாகத் தென்பட்டார். எல்லோரின் கவனத்தையும் ஈர்த்தார். அதையே வர்ண அடுக்கில் கீழ் இருக்கும் ஒரு நபர் செய்தால், *"இவன் ஏழை! இழிகுலத்தான், இடைத்துணி கட்டி வந்தான் என்று சிரிப்பீர்கள் இரவெல்லாம்"* என்று கடிந்து பாகுபாட்டை வளர்த்திடும் இந்த இரட்டைப்போக்குக்கு எதிராக *"இவ்விரட்டைத் தனம் அகலக் கூவு கோழியெ!"* என்று வலுவாக உரைப்பதன் வாயிலாகக் *கூவு கோழியே* என்ற கவிதை நூல் சமூகநீதியை நிலைநிறுத்திட, இரட்டைப் போக்கைக் கண்டிக்கும் கவிதைகளைத் தாங்கியுள்ளது என்பது நிலைநாட்டப்படுகிறது.

**மாந்தர் அனைவரும் சமம்:**

*"ஆணுக்குப் பெண் நிகர் என்று ஆதிமுதல் நடந்து வந்தோம் ... உங்கள் கலப்பாலே உரம் இழந்தோம்! உரிமை கொன்றோம்! ஒன்றற்று நின்றதடா பெண் கூட்டம் ஒரு கட்டை ஏறாத நீங்களுமே உடன் கட்டைத் தீவைத்தீர் எங்களுக்கே!"* என வடவர் கலப்பாலேயே உடன் கட்டை ஏறுதல் போன்ற பெருங்கொடுமைகளுக்கு இச்சமூகம் உள்ளாக்கப்பட்டது என்பதை உணர்த்துகிறது ஒரு கவிதை. மாந்தர்கள் அனைவருக்கும் இந்த மண் சொந்தமானது. உலகோர் அனைவரும் ஒருவருக்கொருவர் உறவினரே என்ற பொருள்பட *"யாதும் ஊரே யாவரும் கேளிர்"* என்று முழங்கியவர் கனியன் பூங்குன்றனார். அதற்கு நேராக,

*"நாங்கள் இம்மண்ணின் மைந்தர்கள்*
*விண்ணும் மண்ணும் விரவிய*
*காதல் பூந்தோட்டத்தில் பூத்த*
*கார்த் திங்கள் கண்ணீர்ப் பூக்கள்*
*மண்ணைத் தொட்டு*
*மலராய்ச் சிரிக்கச் செய்தவர்கள்!*
*மண்ணும் மணிநீரும்*
*காற்றும் கனலும் கலந்ததே எங்கள் உயிர்!*
*ஐம்பெரும் பூதங்களும்*
*மாந்தர் அனைவர்க்கும் சொந்தமெனக்*
*கூவு கோழியே!"*

என்று, கரடு முரடாக இருந்த காட்டைத் திருத்தி கழனிகள் செய்து இம்மண்ணில் மனித உயிர்களை நிலைபெறச் செய்த மண்ணின் மைந்தர்களுக்கே ஐம்பெரும் பூதங்களும் சொந்தமென அறைகூவல் விடுக்கிறார் கவிஞர் சூ.செல்லப்பா.

**முடிவுரை:**

சமூக நீதியின் உயிர் நாடி சமூகத்தில் வாழும் மனிதர் யாவரும் சமம் என்பதில் அடங்கியிருக்கிறது. அந்தச் சமத்துவத்துக்கு எதிரான பாகுபாட்டைக் களைய, மனிதநேய உணர்வுடன் இந்தச் சமூகத்தை மாற்றிட அரசின் சட்டங்களும், மக்களுக்கான திட்டங்களும் சமூக நீதிக் கொள்கையின் அடிப்படையில் அமைந்திட வேண்டும். அதேவேளையில், அரசின் கொள்கைகள் மட்டுமே சமூகத்தில் மாற்றத்தை விளைவித்திடாது. மக்களிடம் கருத்தியல் ரீதியான சிந்தனை மாற்றம் ஏற்படாமல் சமூக மாற்றம் சாத்தியமில்லை. அத்தகைய சிந்தனை மாற்றத்திற்கு வித்திடும் வகையில், கவிஞர் சூ.செல்லப்பாவின் கூவு கோழியே என்ற புதுக்கவிதைப் படைப்பு சமூகநீதிக் கருத்துக்களைத் தாங்கி உரக்கப் பேசுகிறது என்பது இவ்வாய்வுக் கட்டுரையின் மூலம் தெளிவுபடுத்தப்படுகிறது.

*"... அடுத்தவன் தாழ்ந்தவன் என்றும் அவனை அமுக்கி வைப்பதே நியாயம் என்றும் கூறும் குறுகிய மனப்போக்கு குலமாய் இங்கே பிறந்ததெனக் கூவு கோழியே!"*

குலம் இன்றும் தழைத்திருப்பதற்குக் காரணமான பாகுபாட்டு மனநிலையைப் போக்கினால், சமூகத்தில் சமூகநீதி சாத்தியப்படும் என்பது திண்ணம்.

**பார்வை நூல்கள்:**


1. கவிஞர் சூ.செல்லப்பா இ.ஆ.ப., கூவு கோழியே, டாக்டர் அம்பேத்கர் பண்பாட்டு மையம், மதுரை, பதிப்பு: 2003
2. பாபாசாகேப் டாக்டர்.அம்பேத்கர், பேச்சும் எழுத்தும், இந்து மதத்தின் தத்துவம் (தொகுதி. 6), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி. லிட்., பதிப்பு: 2010
3. கி.வீரமணி, வைக்கம் போராட்ட வரலாறு, திராவிடர் கழக வெளியீடு, பதிப்பு: 2023
4. லெனின், அரசு, பாரதி புத்தகாலயம், பதிப்பு: 2015
5. ராபர்ட் எஃப். முல்லிகன், சமூக நீதியின் சுருக்கமான வரலாறு, தி டெய்லி எக்கானமி, பதிப்பு: ஜூலை 2023


**References:**


1. Kavignar S.Chellappa I.A.S., Koovu Kozhiye, Dr. Ambedkar Cultural Centre, Madurai, Published: 2003
2. Babasaheb Dr.Ambedkar, Speech & Writings, The Philosophy of Hinduism (Vol. 6), New Century Book House (P) Ltd., Published: 2010
3. K.Veeramani, Vaikkam Poaratta Varalaru, Dravidar Kazhagam Publication, Published: 2023
4. Lenin, Arasu, Bharathi Publications, Published: 2015
5. Robert F. Mulligan, A Brief History of Social Justice, The Daily Economy, Published: July 2023